**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Feminism in Vasanthi's Novel *Aakasa Veedugal* (Sky Houses)

**A. Josephine,** Research Scholar of Tamil, Annamalai University, Chidambaram, Tamil Nadu, India.
**ORCiD**: **https://orcid.org/0000-0002-2144-313X**
**DOI: 10.5281/zenodo.6623113**

## Abstract

*Feminism seeks liberty through literary, political, economical and other basic rights that women are deprived of. Feminism has been a movement that started in America and got spread to countries all over the world. Feminists struggle for equal rights for all women. It is a movement that asserts all basic rights for women who are tormented under patriarchy. Feminists give hope to women to educate and prove their intellectual knowledge for the development of other women. They affirm women can live in all lifestyles and do work that men do. In Tamil literature also, many women writers utilize feminist ideals to project their themes. Vasanthi is one of the very important writers who often use those ideals to show the pathetic state of women in Tamil society. The purpose of this article is to study the use of feministic ideals in Vasanthi's Novel 'Aakasa Veedugal'.*

**Keywords:** Feminism, Vasanthi, Novel, *Aakasa Veedugal*

## References

[1] Vasanthi. *Aakasa Veedugal.* (Sky Houses) Thiruvarasu Book Center, Chennai-17, 2015.
[2] Ambai. *Udalennum Veli*. Kilakku Pathippagam, Chennai- 14.
[3] Prema. *Penniyam.* Tamil Puthakalayam. Chennai-17.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# வாஸந்தியின் 'ஆகாச வீடுகள்' நாவலின் - பெண்ணியம்

**அ. ஜோஸ்பின்,** முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவி, தமிழியல் துறை,
அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-2144-313X
**DOI: 10.5281/zenodo.6623113**

**ஆய்வுச்சுருக்கம்**

*பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்கப் போராடுதல். ஆண், பெண் இருபாலரும் சமத்துவ உரிமைகளை ஒருங்கிணைந்து நிலைநாட்டுதல். பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளுக்கும், பணிகளுக்கும் உரிமையுடையவர்களாக இருத்தல். பெண்ணுரிமை என்பது எல்லா சூழ்நிலையிலும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் ஆய்வு நோக்கமாக உள்ளது.*

**திறவுச்சொற்கள்:** பெண்ணியம், பாதயாட்டை, இயற்கை, ஆகாச வீடு, தம்புக்கயிறு

**முன்னுரை**

நகரவாசியாக வாழ்ந்த பெண் லலிதா. கிராமத்தில் சபேசன் என்பவருக்கு மனைவியாகிறாள். கிராமத்தின் ஒரு பகுதியான அக்ரஹாரத்தின் கதை. அக்ரஹாரத்தில் வாழ்ந்துவரும் ஒரு குடும்பத்தை மையமாக வைத்துக் கொண்டு, அந்தக் குடும்பத்தோடு பழகும் வேறு சில குடும்பங்களின் நிலையையும் பற்றி எழுத்தாளர் வாஸந்தி அவர்களின் "ஆகாச வீடுகள்"என்ற நாவல் எடுத்துரைக்கிறது. குடும்பத்தலைவி லலிதாவை ஓர் உன்னதமான லட்சியப் பெண் படைப்பென்றே சொல்ல வேண்டும். இந்த நாவலில் லலிதா தன் கணவனின் செயல்களுக்கு எதிராகப் போராடவில்லை. அதற்கு மாறாக கணவனுக்கு ஏற்றார்போல்தன்னை மாற்றிக்கொண்டாள். லலிதாவை பொருமையின் சிகரமாகவும், தெய்வத்தன்மைகொண்டபெண்ணாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளதுமிகவும் போற்றுதற்குரியது.

**எழுத்தாளர் வாஸந்தியின் குறிப்புகள்**

பங்கஜம் எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் மைசூர் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் மற்றும் வரலாற்றுத்துறைகளில் பட்டம் பெற்றவர் மற்றும் நார்வே நாட்டின் ஆஸ்லோ பல்கலைக்கழகத்தில் முதுகலைச் சான்றிதழ் பெற்றவர். 'இந்தியா டுடே' தமிழ் பதிப்பின் ஆசிரியராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்றிய துணிச்சலான பத்திரிகையாளர். கலை, கலாச்சாரம், அரசியல் என்று பல்வேறு புள்ளிகளைத் தொட்டு செல்லும் இவரது கட்டுரைகளில் பல அவை வெளிவந்த காலத்தில் தீவிர கவனம் பெற்றதுடன் விவாதங்களையும் தோற்றுவித்தன. பெண் சார்ந்த பிரச்சனைகளைப் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வறிக்கைகள் எழுதி வருபவர். உலக எழுத்தாளர் மாநாட்டில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். கூர்மையான அரசியல் ஆய்வாளர். 'ஆகாச வீடுகள்' ஹிந்தி மொழிபெயர்ப்புக்கு உத்தர பிரதேச அரசு'சாஹித்ய சம்மான'; விருது வழங்கியுள்ளது.

**பெண்ணியம் விளக்கம்**

ஆங்கிலத்தில் பெமினிசம் (Feminism)என்ற சொல்லுக்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணிய வாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணியக் கொள்கை எனப் பல சொற்கள்

வழங்கப்படுகின்றன. 1980-க்கு முன்பு 'Womanism' என்றிருந்தது. பிறகு 'Feminism' என அழைக்கப்படுகிறது. 1894-இல் வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி 'பெமினிசம்' என்ற சொல்லுக்குப் பெண்ணின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்று பொருள் கூறப்படுகிறது.

**பெண்ணியம் பற்றிய தொல்காப்பியக் கருத்துக்கள்**

"பெருமையும் உரனும் ஆடூஉமேன" (தொ-பொரு-களவியல் - 7). இதன் அடிப்படையில் ஆண்மகன் உரனுடையவனாகப் பெருமைக்குரியவனாக உருவாக்கப்படுகிறான். "அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்குரிய" என்ற பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்படுகிறது. மேலும் 'கற்பு' பெண்ணிற்குக் கட்டாயமாக்கப்படுகிறது. பெண்மகள் அச்சம், நாணம், மடம் என்ற இயல்புகளைக் கொண்டு அழகுடையவளாக, இரக்கமுடையவளாக, அடக்கம், அமைதியின் உருவாகவும், ஆற்றல் இல்லாதவளாக, செயல் திறனற்றவளாக உருவாக்கப்படுகிறாள். மேற்கூறிய மனோபாவத்தில் ஆண், பெண் என இருபாலருக்கும் தனித்தனி வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பெண்தான் மெல்லியள், இப்படித்தான் கட்டுப்பாடுடன் இருக்கவேண்டும். வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்றெல்லாம் கூறி வளர்க்கப்படும்போது அக்கருத்துக்கு மாறாக பெண் தன்னை மாற்றிக்; கொள்ளாது தன்னை ஆட்படுத்திக் கொள்கிறாள். **"பொம்பளை சிரிச்சாப் போச்சு; புகையிலை விரிச்சாப் போச்சு"** என்றும் பேதைமை என்பது பெண்ணிற்கு அணிகலன் (ஔவையார்) என்றும் இகழ்பனவேகாதலன் தான் செய்யும் கொண்டாளை யல்லால் யறியாக் குலமகள் (குலசேகர ஆழ்வார்) என்றும்,பழமொழிகளும், புது மொழிகளும் தோன்றிபட பாலியல் சார்ந்த கருத்துக்களைப் பரப்பின. இவ்வாறாக ஆண்களை ஆள்பவனாகவும், அதிகாரம் செய்பவனாகவும் உருவாக்கிப் பெண்களை அடக்கி, ஒடுக்கி முடக்குகிறது.

**குறுந்தொகை கூறும் பெண்ணியம் பற்றிய கருத்துக்கள்**

சங்கக் காலப் பெண்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தில் இரண்டாம்தரக் குடிமகளாக, கணவனே தெய்வம் என்று கொண்டாடுபவர்களாக ஆணின் தேவையை மட்டும் நிறைவேற்றும் பணிப் பெண்களாக வாழ்ந்தார்கள்.

**வினையே ஆடவர்க்குயிரே வாள்நுதல்**
**மனையுற மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறுந் - 135)**

இவற்றிலிருந்துதொழில் செய்தல் ஆடவர்க்குஉயிர்,வீட்டில் வாழும் பெண்ணிற்கு ஆடவர்தான் உயிர் என அக்கால சமுதாயம் கருதி வாழ்ந்தது. கணவனைப் பின்பற்றித்தான் மனைவி வாழ்தல் என்பதனைவிட அடிமைகளாக இருந்தது தெரிய வந்தது. உலகம் முழுவதும் பால் வகை என்பது ஆண் பெண்ணை அதிகாரம் செய்யும் பான்மையில் அமைந்துள்ளது. ஏனெனில் ஆணாதிக்க சமூகம் வகுத்ததுதான் பால் வகை என்பது ஆண் தனக்குரிய சமூகக்கனவாக இராணுவம், தொழிற்சாலை, அரசியல், நீதி, தொழில்நுட்பம், கல்வி போன்றவற்றைத் தெரிந்து கொண்டான். பெண்ணுக்கு இல்லம் என்பதை உரிமையாக்கி அதற்குள் அவளை ஆட்படுத்துகிறான். ஆதலால் சமூகத்தில் பெண்ணின் இயக்கம் குறைந்தது. குடும்ப அமைப்பில் அடங்கிக் கிடக்கும் பெண், சமூகத்தை அணுக, அவளுக்குக் கணவன் என்ற துணை தேவைப்பட்டது. ஆதலால் அவள் சுயசிந்தனை இல்லாதவளாக ஆடவன் கைப்பாவையாக உருவாக்குவதற்குத் துணை போயிற்று. ஆண், பெண் இடையே அதிகார உறவுகள் வளர்ந்து பெருக குடும்பம் என்ற அமைப்பும் காரணமாயிற்று. தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி.100 –

500-இல் தோன்றிய இரட்டைக் காப்பியத்தில் ஒன்றான‘மணிமேகலை தனது தாய் மாதவியின் குலத்தொழில் செய்யாது, குடும்ப வாழ்க்கையைத்துறந்து நாட்டு மக்களின் பசி தீர்;த்தும் மக்களுக்கு அறமொழிகளை எடுத்து உரைத்தும் பல நல்லறங்களையும் செய்து பௌத்த நெறியின்படி ‘முத்தி’ பெற்று அறச் செல்வியாகக் காணப்பட்டாள்.

**“அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**

**மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்**

**உண்டியும் உடையும் அல்லது கண்டதில்லை”. (மணிமேகலை)**

காப்பியத்திலேயே பெண்ணியம் மணிமேகலை வாயிலாகப் பேசப்பட்டது அறியலாம்.

**பெண்ணின் இரக்கப்பண்பு**

சற்று முன்னால் அடியும் திட்டும் வாங்கின நினைவேயில்லாமல் நிதானமாக ரசித்து சாப்பிடும் ராஜூவை அவள் யோசனையுடன் பார்த்தாள். இந்தப் பிள்ளை பக்கத்து வீட்டில் பிறந்திருந்தால் அந்தக் கோபாலியை விட அதிக சாமர்த்தியமாய் இருந்திருப்பான் என்று தோன்றிற்று. பக்கத்து வீட்டில் வெளிச்சம் அதிகம் இருந்திருக்கும். சுவாசிக்கக் காற்று இருந்திருக்கும். கோபாலி மாதிரி இவனும் பளிச்சென்று சிரித்திருப்பான், பேந்தப் பேந்த விழிக்காமல் இரண்டு வருஷமாக நித்யம் சொல்லும் வாய்ப்பாட்டைத் தவறிச்சொல்லாமல்-

**“இன்னும் கொஞ்சம் சேப்பங்கிழங்கு கறி வேணும்….”**

**இந்தமாதிரி சுரணை கெட்டுப் போகாமல்--**

**சட்டென்று அவன் சுயநினைவுக்கு வந்தான்.**

**நமக்கு என்ன நேர்ந்துவிட்டது இன்றைக்கு மீனு கேட்ட கேள்வி மனசைக் குழப்பிவிட்டதா?**

**‘இப்படி சிரிச்சுண்டே காரியம் செய்யறவாளெப் பார்த்ததில்லே.’…**

**…“அதனாலேன்னு இல்லே. நமக்கெதுக்கு மீனு அதைப் பத்தியெல்லாம்?” ஒவ்வொருத்தர் ஒவ்வொரு காரணம் சொல்லுவா. போனவளுக்குத்தான் உண்மையான காரணம் தெரியும்”. (வாஸந்தியின் ‘ஆகாச வீடுகள்’, ப.15)**

சூழ்நிலைக்கு ஏற்றார்போல் தன்வயப்படுத்துபவள் பெண். ருக்மிணியின் பார்வை தாழ்ந்தது ஏதோ சொல்லத்தயங்குகிற மாதிரி இருந்தது. வார்த்தைகளை ஜோடிப்பதைப் பெரிய கஷ்டம்போல அவள் உட்கார்ந்திருந்ததைப் பார்க்க சகிக்காமல் லலிதா மெல்லக் கேட்டாள்.

**“என்ன விஷயம் மாமி?”**

**“கிருஷ்ணனுக்கு உடம்பு சரியாயில்லையாமே?”**

**“ஆமாம், உங்களுக்கு எப்படித் தெரியும்?”**

**“டவுன்லே டாக்டரோட பொண்ணு சொன்னா மனசு கேக்கல்லே. உடனே பஸ்ஸைப் பிடிச்சு வந்தேன்”.**

**இதைச் சொல்வதற்குள் ருக்மிணியின் முகம் சிவந்து போயிற்று. நெற்றியில் வியர்வை துளிர்த்தது.**

**லலிதா வியப்புடன் அவளைப் பார்த்தாள். (மேலது., ப.24,25)**

என்று இரண்டு வருஷங்கள் முன்பு நடுக்கூடத்தில் உட்கார்ந்து இவள் கண்ணீர் விட்டது நினைவுக்கு வந்தது. கடைசியில் பல்லைக் கடித்துக்கொண்டு உட்காரவும் இல்லை, தூக்குப் போட்டுக்கொண்டு சாகவும் இல்லை. ஒரு நாள் இரவு வீட்டை விட்டுப் போய்விட்டாள். ஊர் இன்னமும் தூற்றிக்கொண்டு

இருக்கிறது இவளை. டவுனில் யாரோ ஒரு செட்டியாருடன் இருக்கிறாள் என்கிறது. பாலு வாத்தியார் தெருவில் போகும்போது தலை நிமிர்ந்து நடப்பதில்லை. சோர்வும், லேசாய் மூப்பும், முகத்தில் தெரிய ‘மனசு கேக்கல்லை’ என்று இன்று இந்த வெயிலில் வந்து நிற்கும் இவளைப் பார்க்கும்போது அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த மாதிரி மனசுடையவள் இன்னும் கொஞ்சம் ஏன் பல்லைக் கடித்துக்கொண்டு உட்காரவில்லை என்று தோன்றியது.

**ருக்மிணியின் தைரியம்**

ருக்மிணி கண்களைத் துடைத்துக்கொண்டு லலிதாவை தீர்க்கமாகப் பார்த்தாள்.

**“பசியோட கொடுமை அதை அனுபவிச்சவாளுக்குத்தான் தெரியும். அவர் கொடுத்த காசு ஒரு வாரச் சாப்பாட்டுக்குத்தான் காணும் அப்புறம் என்ன பண்ணுவேன்? எனக்கு சில சமயம் தோணும் லலிதா, அந்த சித்தேரி இருக்கு பாரு, அங்கே பிறந்திருந்தா எவ்வளவு நன்னாயிருக்கும்னு தோணும். எந்த வேலையை வேணும்னாலும் கூச்சமில்லாமெ செய்யலாம். வயித்தை நிரப்பிக்கலாம். இங்கே அக்ரஹாரத்திலே ஒரு பள்ளிக்கூட வாத்தியாரோட பெண்டாட்டியா இருந்துண்டு நா என்ன வேலைக்குப் போக முடியும்? டவுன்லே யார் வீட்டிலேயாவது சமைக்கப் போகலாம்னு எவ்வளவோ பார்த்தேன் வேலை கிடைக்கல்லே என்ன செய்யட்டும்?. (மேலது., ப.28)**

லலிதா தலையை குனிந்தபடியே உட்கார்ந்திருந்தாள் ‘நா உங்களை எந்தக் காரணத்தையும் கேட்கலியே?’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் லலிதா.

**ருக்மிணியின் அசாத்திய துணிச்சல்**

**“மாமி நீங்க ஓடிப் போனதிலே ஏதும் தப்பில்லே. நானாயிருந்தா அப்படித்தான் செஞ்சிருப்பேன்” என்று தனக்குள் மீனு சொல்லிக்கொண்டாள்.**

**‘சாப்பாட்டுக்குப் பணத்தைக் கொடுக்காமலே குடிச்சுண்டு, சூதாடிண்டு புருஷன் இருந்தா பெண்டாட்டி அது பொறுக்காமெ வெளியிலே போனா என்ன தப்பு?’. (மேலது., ப.35)**

அந்த ருக்மிணி மாமி ரொம்ப சுவாரஸ்யமான கேரக்டர் என்று அவள் நினைத்துக்கொண்டாள். சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவள் மகா கட்டுப்பெட்டித்தனமாக இருக்கும் இந்த கிராமத்தில்பிறந்த ஒருத்தி, இந்த மாதிரி செய்ய வேண்டுமென்றால் அசாத்திய துணிச்சல் இருக்க வேண்டும் என்று தோன்றிற்று, கட்டுப்பாட்டை மீறுபவர்கள்தான் அதிக சுவாரயஸ்மானவர்கள், ராமாயணத்து ராவணன் மாதிரி ‘மில்டன்’னின் சைத்தான் மாதிரி.

**நம்பிக்கை நட்சத்திரம்**

**“மீனு அக்கா அதோ பாரு மறுபடி மேலே நாரை!”**

**இப்பொழுது மேலே பெரிய கூட்டமாக இருந்தது. புதிதாக வேறு பல நாரைகள் சேர்ந்துகொண்டிருந்தன. நீல நிற ஆகாசப் பின்னணியில் அதன் வெளுப்பு கண்ணைப் பறித்தது.**

**“நாமும் அதோட ஓடலாமா ராஜு?”**

**“ஓ”…**

**…“பக்கத்து டவுன்லே இருக்கு. பஸ்ஸிலே போகலாம். ரொம்ப தூரம் இல்லே மீனு அக்கா!”**

**மீனு யோசனையுடன் அவனைப் பார்த்தாள். இந்தப் பிள்ளை அன்புக்காக எத்தனை ஏங்குகிறது—காய்ந்துபோன மண் நீரை உறிஞ்சுகிற மாதிரி! (மேலது., ப.57)**

**லலிதாவின் மேன்மையான குணம்**

மாமா என்றைக்குமே எந்தத் தருணத்திலுமே மன்னியுடனும், ராஜுவுடனும் சிரித்துப் பேசினதில்லையா என்று அவளுக்கு ஆச்சரியாக இருந்தது. இருபத்தி ஆறு மாடி கட்டிடத்தில் பம்பாயில் வளர்ந்து பத்து க்ளாஸ் வரை கான்வென்டில் மன்னி படித்தவள் என்று அம்மா சொல்லியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. அதனால்தான் மன்னியைப் பார்க்கும்போதெல்லாம் ஆச்சரியமேற்படுகிறது. எப்படி ஒரு நாகரிகச் சுழலில் நாகரிகமாக வளர்ந்தவள் இந்தக் கிராமத்தில் அநாகரிக வார்த்தைகளை நாள் முழுவதும் கேட்டுக்கொண்டு சுரணையில்லாமல் சிரித்துக்கொண்டிருக்கிறாள் என்று திகைப்பேற்படுகிறது.

**தொகுப்புரை**

‘ஆகாசவீடுகள்’ நாவலில் இடம்பெற்றுள்ள கதைத்தலைவனாகிய சபேசன் சிறந்த ஒழுக்கமுள்ளவனாகவும், சிறந்த உழைப்பாளியாகவும் படைக்கப்பட்டுள்ளான். தன் குடும்பத்திலுள்ளவர்களிடம் அன்பாக நடந்துகொள்வதில்லை. எந்த நேரமும் மனைவி, மகனிடம் கோபத்துடனே நடந்து கொள்கிறான். சபேசன் மருமகள் மீனா சில நேரங்களில் சபேசனின் செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தைரியமான பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளாள். லலிதா கணவனிடம் எதிர்த்து பேசுவதேயில்லை. மாறாக கணவனின் குணநலன்களுக்கு ஏற்றார்போல் நடந்துகொள்கிறாள். எவ்வளவு பிரச்சனை ஏற்பட்டாலும் எதுவுமே நடக்காததுபோல், எந்தநேரமும் சிரித்துக்கொண்டே அவளது வீட்டுக்கடமைகளை செவ்வனே ஆற்றுகிறாள். அக்ரஹாரத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு பிரச்சனையில் வாழ்வதாக கதையில் சுட்டப்பட்டுள்ளது. மீனா மாமாவின் செயல்களை அறிந்து ஊரிலுள்ள குழந்தைகளுக்கு பள்ளி ஒன்றை தனது இல்லத்திலேயே ஆரம்பி;த்தாள். அவளது காதலன் மீனாவைப் போன்று அந்த ஊரிலேயே மருத்துவமனை ஒன்றை அமைத்து, தனது தங்கையைப் போன்று உடலளவில் ஊனமுற்றவர்களுக்கு உதவிசெய்கிறான். ‘ஆகாச வீடுகள்’ என்ற கதையானது பல்வேறு குணநலன்களுடைய மாந்தர்களைப் பற்றி சித்தரித்துள்ளது. லலிதா என்ற பெண்ணே லட்சியவாதியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். இன்னும் லலிதாவை போன்ற இலட்சியப் பெண்கள் குடும்பச் சுமைகளைச் சுமந்துகொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதைச் சித்தரிப்பதாக இக்கதை இடம் பெற்றுள்ளது.

**துணைநூல் பட்டியல்**

[1] வாஸந்தி. *ஆகாச வீடுகள்*. திருவரசு புத்தக நிலையம், சென்னை-17, 2015

[2] அம்பை. *உடலெனும் வெளி*. கிழக்குப் பதிப்பகம், சென்னை – 14.

[3] பிரேமா. *பெண்ணியம்*. தமிழ்ப் புத்தகாலயம், சென்னை – 17.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.